தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 26 /மா/2025
நாள் 10.02.2025

திருவாளர்கள் எம். ஜாகிர் உசேன்
மற்றும் ர. சாஜித் பாஷா
சென்னை நகர், சென்னை-30. ......... மனுதாரர்கள்

மண்டல அலுவலர்
மண்டலம் 8
பெருநகர சென்னை மாநகராட்சி ......... எதிர் மனுதாரர்

சென்னை செனாய் நகர், புனித ஜார்ஜ் கான்வெண்ட் தெரு, எண். 24, பழைய எண்.4/1 என்கிற முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் எம்.ஜாகிர் உசேன் மற்றும் ர.சாஜித் பாஷா என்பவர்களின் 14.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.11.2024 அன்று பெறப்பட்டு 26/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை செனாய் நகர், புனித ஜார்ஜ் கான்வெண்ட் தெரு, எண். 24, பழைய எண். 4/1 என்கிற முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் எம்.ஜாகிர் உசேன் மற்றும் ர.சாஜித்பாஷா என்பவர்கள் தங்களுடைய 14.11.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளனர்.

சென்னை 600 102, அண்ணாநகர் கிழக்கு, 3–வது நிழற்சாலையில் கதவு எண்கள். H5, H6-ல்அமைந்துள்ள “மஸ்ஜிதே” ஜாவித் பள்ளிவாசலுக்கு சொந்தமான வக்ஃப் வாரியத்தால் அனுமதியளிக்கப்பட்டு பள்ளிவாசல் கட்டப்பட்டது என்றும், இதன் இருபுறங்களிலும் சுமார் இரண்டடுக்கு மாடிகள் கொண்ட கட்டிடங்கள் கட்டப்பட்டு வணிக ரீதியாலான நோக்கத்தில் வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றும், இந்த வருமானம் ஆண்டு வருவாயில் இருந்து

சுமார் 7% சதவீதம் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்துக்கு சகாய தொகையாக இந்த பள்ளிவாசலில் இருக்கும் முறையாக அங்கீகாரம் இல்லாத நிர்வாகம் என்று கூறி கொண்டுள்ள நபர்களால் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்துக்கு அளிக்கப்பட்டு வருகிறது என்றும், இந்த கட்டிடங்களானது கடந்த 2000–ம் ஆண்டில் கட்டப்பட்டது என்றும், கட்டிடம் கட்ட வேண்டும் என்றால் நிர்வாகத்தை சேர்ந்தவர்கள் முறையாக தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் அனுமதி பெற்று பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டிட திட்ட அனுமதி வாங்க வேண்டும் என்றும், ஆனால் இந்த கட்டிடங்களானது தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திலும் அனுமதி பெறாமலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ல் கட்டிட திட்ட அனுமதி பெறாமலும் கட்டப்பட்டுள்ளது என்றும், இது குறித்து தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் மனு அளித்ததன் பேரில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் பொது தகவல் அலுவலர் ''இவ்வலுவலகத்தில் தகவல் இல்லை'' என்று தெரிவித்துள்ளார் என்றும், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் இதுவரை எந்த ''திட்ட அனுமதியும் வழங்கப்படவில்லை'' என்று தெரிவித்துள்ளார்கள் என்றும், ஆனால் எந்தவித அனுமதியும் இல்லாமல் H5,H6-ல் கட்டப்பட்டிருக்கும் இரண்டு மாடி கட்டிடங்களுக்கு சொத்துவரி மட்டும் The Secretary Mosque Committee" என்ற பெயரில் வரி நிர்ணயம் செய்யப்பட்டு எந்த அடிப்படையில் பணம் செலுத்தி வருகிறார்கள் என்ற சந்தேகமும், எப்படி சொத்துவரி நிர்ணயம் செய்தார்கள் என்று வருவாய்த்துறையின் மீதும் சந்தேகம் உள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

எனவே, மேற்கண்ட கட்டிடம் எந்த அடிப்படையில் கட்டப்பட்டது என்றும், சொத்துவரி எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்தார்கள் என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8–ன் அதிகாரிகள் விசாரணையின்போது ''கட்டிட திட்ட அனுமதி'' சான்றிதழ் சமர்ப்பிக்க ஆணையிடுமாறும், கட்டிட திட்ட அனுமதி இல்லை எனில் சம்மபந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

2. மேற்கண்ட மனுதாரர்களின் மனுவினை பரிசீலனை செய்ததில் மனுதாரர் குறிப்பிட்ட **H5, H6 ஆகிய கட்டிடங்கள் 2000ம் ஆண்டு கட்டப்பட்டது என்று அறியமுடிகிறது.**

3. இம்மாதிரி நிகழ்வுகளில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் சட்டம் 2014, பிரிவு 10(3) (c)ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிவு 10 (3)–ல் The Ombudsman shall not enquire into matters relating to:

(a) xxxxx

(b) xxxxx

(c) any complaint filed after the expiry of five years from the date on which the occurrence is said to have taken place.

4. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள H5, H6 ஆகிய கட்டிடங்கள் 2000–ஆம்ஆண்டு கட்டப்பட்டது என்பதால், மேற்கண்ட சட்டப்பிரிவின்படி மனுதாரர்களின் புகார் மீது விசாரணை மேற்கொள்ள அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருவாளர்கள் எம். ஜாகிர் உசேன் மற்றும்
ர. சாஜித் பாஷா,
எண். 24, பழைய எண். 4/1,
புனித ஜார்ஜ் கான்வெண்ட் தெரு,
செனாய் நகர்,
சென்னை 600 030

2) மண்டல அலுவலர்,
மண்டலம் 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 36பி, புல்லா அவன்யூ,
செனாய் நகர்,
சென்னை 600 030.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ/உதிரிகள்

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).